# Historical Traces in the Novel Marthandavarma

**Thamilarasi G**
*Ph.D. Research Scholar*
*University College, Thiruvananthapuram, Kerala*

**Dr. P. Santhi**
*Professor, Department of Tamil*
*University College, Thiruvananthapuram, Kerala*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346740

**Abstract**
*C.V. Ramanpillai's Marthandavarmanaval is the first historical novel in the history of Malayalam literature. This novel deals with the political situation in the 18th century Trivandrum, the issues of succession to the throne, the conspiracy of the eight children, the desire of the brothers to rule, and the history of Padmanabhaswamy. Historical places like these are being brought back to life in literary form. This article explores those historical traces and explains how they are reflected in the novel.*
***Keywords:*** *Pilla, Kuruppu, Thambimaar, Sannan*

**Footnotes**
1. K. M. George, A Survey of Malayalam Literature, Asia Publishing House, 1968.
2. Dr. K. Raghavan Pillai, An Introduction to C. V.'s Historical Novels, Marthandavarma, p. 24.
3. Dr. K. Raghavan Pillai, An Introduction to C. V.'s Historical Novels, Marthandavarma, p. 24.
4. Marthandavarma (novel)
5. Marthandavarma (novel)
6. Marthandavarma (novel)
7. Marthandavarma (novel), p. 240
8. Marthandavarma (novel), p. 231
9. Marthandavarma (novel), p. 142
10. Marthandavarma (novel), Lesson 3
11. Marthandavarma (novel), p. 148
12. Marthandavarma (novel), p. 149
13. Marthandavarma (novel), p. 143
14. Marthandavarma (novel), p. 139
15. Marthandavarma (novel), p. 156
16. Marthandavarma (novel), Lesson 2

**Primary Source**
1. C. V. Raman Pillai, Marthandavarma, 18th Edition, D. C. Books.

# மார்த்தாண்டவர்மா நாவலில் வரலாற்றுச் சுவடுகள்

***தமிழரசி. க***
முனைவர் பட்டம் ஆய்வாளர்
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***முனைவர் ப. சாந்தி***
பேராசிரியர், தமிழ்த்துறை
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***ஆய்வுச் சுருக்கம்***
*சி.வி.ராமன் பிள்ளையின் மார்த்தாண்டவர்மாநாவல் மலையாள இலக்கிய வரலாற்றில் முதலாவது வரலாற்று நாவலாக அமைகிறது. இந்தநாவலில் 18 ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் அரசின் அரசியல் நிலவரங்களும், சிம்மாசன வாரிசுரிமை பிரச்சினைகளும், எட்டு வீட்டு பிள்ளை மாரின் சதி, தம்பிமாரின் ஆட்சிக்கான ஆசை, மற்றும் பத்மநாபபுரம், காழக்கூட்டம் போன்ற வரலாற்று இடங்கள் இலக்கிய வடிவில் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை, அவ்வரலாற்று சுவடுகளை ஆராய்ந்து, அவை நாவலில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை விளக்குகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *பிள்ள, குறுப்பு, தம்பிமார், சண்ணன்*

**முன்னுரை**

வரலாறும், இலக்கியமும் மனித சமுதாய வளர்ச்சியின் இரு முக்கியப் பாகங்களாகும். இலக்கியம் ஒரு சமூகத்தின் அரசியல், கலாச் சாரம், மற்றும் சமூக அமைப்பு ஆகியவற்றை கலை நயத்துடன் பதிவு செய்யும் ஆவணம். அதேசமயம் வரலாறு, அந்தச் சமூகத்தின் உண்மையான அனுபவங்களைச் சான்றுகளுடன் நிரூபிக்கும் துறையாகிறது. இவை இரண்டும் இணையும் இடத்தில், வரலாற்று நாவல் எனும் இலக்கிய வகை உருவாகிறது.

இந்திய மொழிகளில் வரலாற்று நாவலின் முன்னோடி படைப்புகள் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றின. ஆரம்பகட்டத்தில் மலையாள நாவல்கள் பெரும்பாலும் சமூகச் சூழல், காதல், குடும்ப வாழ்க்கை ஆகியவற்றைச் சித்தரித்தன. ஆனால் விரைவிலேயே இலக்கியம் வரலாற்றை நோக்கி திரும்பியது. வரலாற்று நாவல் என்பது கற்பனைக்கும் வரலாற்றுக்கும் இடையே ஒரு பாலமாக திகழும் புனைவாகும். அவ்வாறு மலையாளத்தில் அத்தகுமரபை உருவாக்கிய முதல் படைப்பேசி. வி. ராமன் பிள்ளையின் மார்த்தாண்ட வர்மா (1891). 1 இந்தநாவல், திருவிதாங்கூர் அரசமரபில் நிகழ்ந்த அரசியல் சிக்கல்களை கதை வடிவில் உயிரோட்ட மிக்க முறையில் வெளிப்படுத்துகிறது. எனவே, இது ஒரு இலக்கியப் படைப்பு மட்டுமன்றி, வரலாற்றுச் சுவடுகளைக் கொண்ட ஆவணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வரலாற்றுப் பின்னணி**

திருவிதாங்கூர் அரசின் வரலாறு, 18-ஆம் நூற்றாண்டில் மிகப் பெரிய அரசியல் மற்றும் சமூக கலகங்களை எதிர் கொண்டது. மார்த்தாண்ட வர்மாநாவல் உருவான காலத்தின் வரலாற்றுப் பின்னணி, நாவலின் கதைக்களத்தையும், அதன்

வரலாற்றுப் பண்பையும் விளங்கச் செய்யும் முக்கிய அங்கமாகும். சி.வி. ராமன் பிள்ளையின் மார்த்தாண்டவர்மாநாவல், வெறும் காதல்-சாகசக்கதை அல்ல; அது *18*-ஆம் நூற்றாண்டின் திராவாங்கூர் அரசின் அரசியல் மற்றும் சமூக வரலாற்றை வெளிப்படுத்தும் ஒரு உயிர்ப்பான ஆவணம் ஆகும். நாவலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பதிப்பிலும் ஏராளமான வரலாற்றுச் சுவடுகளை காண முடிகிறது. இதையே வரலாற்று ஆசிரியர்கள், மார்த் தாண்டவர்மா வரலாற்று உண்மைகளுக்கும் புராண நம்பிக்கைகளுக்கும் இடையில் பின்னப்பட்ட ஒரு கதை. என்று கூறுவதை காண முடிகன்றது. இந்தச் சுவடுகளில் சிலவை மிக முக்கியமான வரலாற்றுப் பகுதிகளாகும். உதாரணமாக: மருமக்கத்தாயம் என்ற சமூக அமைப்பு, எட்டு வீட்டு பிள்ளமார் எனும் பிரிவினர், தம்பி சகோதரர்களின் அரச ஆசை, சாரொட்டு கோட்டை, பத்ம நாபபுரம், களியங்காடு ஆலயம் போன்ற வரலாற்றுப் பகுதிகள், இறுதியில் *1729*-இல் மார்த்தாண்ட வர்மா சிங்காசன மேற்றல், இவை அனைத்தும் நாவலின் அடித்தளத்தையே வரலாற்றோடு இணைத்துக் காட்டுகின்றன. இந்தக் கட்டுரையின் இந்தப் பகுதியில், சில முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை நாவலில் எவ்வாறு சித்தரித்துள்ளார் என்பதை ஆய்வு செய்வோம்.

### மருமக்கத்தாய முறை

மருமக்கத்தாயம் என்பது கேரளாவின் பாரம்பரிய வாரிசுரிமை முறையாகும். இம்முறையில், குடும்பத்தின் சொத்து, அதிகாரம் மற்றும் மரபுச் சிம்மாசனம் அம்மாவின் வழித்தோன்றலுக்கே உரிமையாகும். அதாவது, ராஜாவின் சொந்த மகனுக்கு அரசுரிமை செல்லாது; மாறாக, அவன் சகோதரியின் மகனுக்கே அரசுரிமை கிடைக்கும். இதனால், ராஜா ராம வர்மாவின் மரணத்திற்கு பின், அவரது மருமகன் மார்த்தாண்டவர்மாவே உரிய வாரிசு எனக்கருதப்பட்டது. மருமக்கத்தாய ஒப்பந்தத்தின் படி, மன்னரின் மரணத்திற்குப் பிறகு, அரியணை அவரது மருமகன் மார்த்தாண்டவர்மாவுக்கு மட்டுமே திருவிதாங்கூர் அரசவுரிமைச் சிக்கலில் இந்த மரபு மிகப்பெரும் பங்காற்றியது.

மார்த்தாண்டவர்மா நாவலில் வரும் முக்கிய கதாபாத்திரமான சுபத்ராதனது அழகு மற்றும் கடுமையான மன உறுதியால் அறியப்பட்ட ஒரு முக்கிய கதாபாத்திரம், எட்டு வீட்டில் பிள்ள மாரின் சதித் திட்டங்களிலிருந்து வருங்கால மன்னர் மார்த்தாண்டவர் மாவைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறார். குடமன்பிள்ளையின் உறவினரும் அனந்த பத்மநாபனின் ஒன்று விட்ட சகோதரியுமான இவர், எதிரிகளின் ரகசிய சதித்திட்டங்களை வெளிக் கொணர்ந்து வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறார், இது மன்னரின் இறுதி வெற்றிக்கு பங்களிக்கிறது. இருப்பினும், பத்மநாபன் தம்பியுடனான அவரது தொடர்பு அவரது தோல்வியுற்ற திருமணத்திற்கு வழிவ குக்கிறது, இறுதியில் அவரது மாமாகுடமன் பிள்ளையின் கைகளில் அவரது மரணத்தில் முடிகிறது, இதை நாவலில்,

> അമ്മാവനായകുടമപിള്ളയുടവൊളാലയൊ ണ്സുഭദ്രമരിക്കുന്നതന്നെോക്കുക...മരു മക്കത്തായത്തിനടെുവില്മറിച്ചിട്ടങന് തഃക്ഷോഭങ്ങളുടപ്രതീകമാണോ?”[3]

சுபத்ராவின் இறப்பு, நாவலில் குடும்பம்-அரசியல் மோதலின் அடையாளமாக சித்தரிக்கப்படுகிறது. மருமக்கத்தாயம்மரபு, அரசியலில் குழப்பங்களையும் சதிகளையும் உருவாக்கியது என்பதை வலியுறுத்துகிறது.

### தம்பிசகோதரர்கள் - எட்டு வீட்டு பிள்ளமார்

“திராவாங்கூர் அரசின் அரசவழி சண்டையில் முக்கிய பங்காற்றியவர்கள் தம்பி சகோதரர்கள் ஆவர். பப்புத்தம்பி

*(பத்மநாபன்தம்பி) மற்றும் ராமன் தம்பி ஆகியோர், அக்கால அரசனான இராமவர்மாவின் மகன்கள். மருமக்கத் தாயப் பரம்பரை முறையின் படி சிங்காசனத்தில் அமர வேண்டியது மர்த்தாண்டவர்மாவாக இருந்தாலும், தம்பி சகோதரர்கள் தங்களை மக்கத்தாய வழியின் உரிமையாளர்கள் என்று நிலை நிறுத்தினர்.*

"രാജസിംഹാസനംതമ്പിമാരുടെഅവകാശംതന്നയൊണ്"[4]

***தமிழில்: தம்பிகளின் உரிமைதான் அரியணை*** *என்று கூறிய எட்டு வீட்டில் பிள்ளைமார் உடன் கைகோர்த்து, மார்த்தாண்டவர் மாவை சிங்காசனத்திலிருந்து நீக்கி தாங்களே ஆட்சிக்கு வர வேண்டும் என்ற சதித்திட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இருவரின் முடிவு, வரலாற்று உண்மையையும் நாவல் கற்பனையையும் இணைக்கிறது.*

"ഈകഥാസംബന്ധമായുള്ളരാത്രിമപേറഞ്ഞഗൃഹത്തിഎട്ടുവീടന്മാരുടെസംഘംയോഗംതമ്പിയുടെഅപക്ഷേപ്രകാരംനിശ്ചയിച്ചിട്ടുണ്ടായിരുന്നതിനാകുടമപിള്ളഅ വിടഹൊജരായി മറ്റുള്ളവരുടെ ്തിരിക്കയായിരുന്നു".[6]

*தமிழில்: மார்த்தாண்டவர்மாவின் வாள் தம்பிகளின் முடிவைத் தீர்மானித்தது."*

*என்று சி.வி. எழுதும் போது, அதுவெறும் இலக்கிய அலங்காரம் அல்ல; திராவாங்கூர் அரசில் மருமக்கத்தாய மரபு வென்றதற்கான அடையாளமாகவும், மக்கத்தாய வழியை ஒட்டிய அரசவாதம் முடிவுக்கு வந்ததற்கான சின்னமாகவும் அமைகிறது.*

*திராவாங்கூர் அரசின் 18-ஆம் நூற்றாண்டு வரலாற்றில் எட்டு வீட்டு பிள்ளமார் மிகப் பெரும் பங்காற்றினர். எட்டு குடும்பங்கள் என்பதால் அவர்கள் எட்டு வீடு என்று அழைக்கப்பட்டனர். கழக்கூட்டத்துப் பிள்ளை, ராமநாமத் தம்பிள்ளை, செம்பழந்திப்பிள்ளை, குடமண் பிள்ளை, வெங்கனூர்பிள்ளை, மார்த் தாண்டாலயம் பிள்ளை, பள்ளிச்சல் பிள்ளை, கொளத்தூர்பிள்ளை ஆகிய எட்டுப் பெருமான்கள் ஆவர். பெரும் நிலப்பரப்பு, படை, மக்கள் ஆதரவு ஆகியவை அவர்களை அரசனுக்கே சமமாக ஆக்கியது. வரலாற்று ஆதாரங்கள் கூறுவதற்கு ஏற்ப, மார்த்தாண்டவர்மாவை சிங்காசனத்தில் அமரவிடாமல், பலமுறை அவரது உயிரைக் கவர முயன்றவர்கள்.*

ഈകഥാസംബന്ധമായുള്ളരാത്രിമേപറഞ്ഞഗൃഹത്തിഎട്ടുവീടന്മാരുടെസംഘംയോഗംതമ്പിയുടെഅപക്ഷേപ്രകാരംനിശ്ചയിച്ചിട്ടുണ്ടായിരുന്നതിനാകുടമപിള്ളഅ വിടഹൊജരായിമറ്റുള്ളവരുടെവരവ-്കാത്തിരിക്കയായിരുന്നു".[6]

*தமிழில்: அந்த இரவு, குட மண் பிள்ளையின் வீட்டில் அனைத்து எட்டு வீட்டு பிள்ளமாரும் கூட்டம் நடத்தி, தங்கள் திட்டங்களை செயல்படுத்தத் தயார் ஆகினர்.*

*கூட்டத்தில் அவர்கள் அரசர் மார்த்தாண்டவர்மாவை சிங்காசனத்தில் அமரவிடாமல் நீக்க, அவருக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை திட்டமிட்டனர். பிள்ளமார், அரச குடும்பத்தின் பாதுகாப்பையும், அரசரின் உயிரையும் பலமுறை சவால் செய்தனர்; ஆனால், அவர்களின் முயற்சிகள் தோல்வியடைந்தாலும், வரலாற்றில் அவர்களது தாக்கம் நிலைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.*

"തിരുവനന്തപുരത്ത്വച്ച്യുവരാജാവിനഹൈനിക്കുന്നത്"...[7]

*தமிழில்: திருவனந்தபுரத்தில் வைத்து இளையராஜாவின் படுகொலை...*

“ആ റു ങ്ങ □ നി ന് നു തി രു വ ന ന് ത പു ര ത് ത കേ ക് ക് എ ഴു ന് ന ള് ളി ക് കു മ് പ ോ □ രാ മ നാ മം ത് തി □ പി ള് ള മു മ് പാ യ എ ട് ടു വീ ട് ടി □ പി ള് ള മാ □ ആ □ ശ േ വ ര ത് ത ോ ടു കൂ ടി അ മ് മ ത് ത മ് പു രാ ട് ടി യ യെ യും രാ ജ കു മാ ര ന യെ യും ക ൊ -ന്നതിന്ഒരുമ്പടെട്ടു...”[8]

இத்தகு யுவராஜாவை கொல்வதற்காக பிள்ளைமார்கள் நிறைய சூழ்ச்சிகள் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் அரசியல் ஆற்றல், வலிமை மற்றும் சதிவிதியை வெளிப்படுத்திய விதம், மார்த்தாண்டவர்மா காலத்தின் அரசியல் சூழலை விரிவாக புரிந்து கொள்ள உதவுகிறது. எனவே, எட்டு வீட்டு பிள்ளமாரின் வரலாற்று தாக்கம், சதி முயற்சிகள் மற்றும் அரசியல் நிகழ்வுகளை ஆராய்வது திராவாங்கூர் வரலாற்றுப் படைப்புகளுக்கான ஒரு முக்கியமான பகுதி ஆகும்.

**சமூக மற்றும் கலாச்சார சுவடு**

நாவல் அரசியல் வரலாற்றை மட்டுமல்ல, சமூக அமைப்பையும் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்துகிறது.

‘വാ□, കുന്തംമുതലായആയുധങ്ങളുംവഹിച്ചിരുന്നു.”[9]

*தமிழில்: அவர்கள்வாள், போன்ற ஆயுதங்களையும் ஏந்தியிருந்தனர்.*

*18-ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் நாயர் படைபயன்படுத்திய பாரம்பரிய ஆயுதங்கள் வாள் , ஈட்டி (குன்தம்).*

വില്ലുംആവനാഴിയുംധരിച്ചഒരുനായ□”[10]

*தமிழில்: வில் மற்றும் அவநாழி எப்படும் ஆயுதம் ஏந்திய ஒரு நாயர்*

இந்த ஆயுதங்கள் நாவலின் கற்பனை அல்ல; அவை அந்நாள் படைகளின் முக்கிய ஆயுதங்கள். நாயர் வீரர்கள் பாரம்பரியமாக கேரளத்தில் படைச்சேவைக்குப் பெயர் பெற்றவர். ஆவனாழி மற்றும் வில் என்பது நாயர் படையினரின் அடையாள ஆயுதங்கள். குறுப்பு என்பது நாயர் சமூகத்தின் உயர்ந்த பிரிவைச் சேர்ந்த படைத் தலைவர்கள். வெலுகுறிப்பு என்ற பெயர், அரசபடையில் பணியாற்றிய ஒரு நாயர் அதிகாரியின் பட்டம். நாவலில் வரும் வேலுக் குறுப்பு உண்மையில் அந்நாள் அரசப்படையில் இருந்த அதிகாரிகளை அடையாளப்படுத்துகிறது. மார்த்தாண்டவர்ம ஆட்சி காலத்தில் நிலவியிருந்த சமூக ஏற்றத்தாழ்வுகளையும் சாதிய வன்மங்களையும் நாவல் பல தலங்களில் எடுத்துரைக்கிறது எடுத்துக்காட்டாக

“തിരുവനന്തപുരത്തുപത്മനാഭസ്വാമിക്ഷേത്രത്തിനുപടിഞ്ഞാറുള്ള ഭാരങ്ങളി□അക്കാലങ്ങളി□നമ്പൂതിരിമാ□, പ ോറ്റിമാ□,തിരുമുല്പാടന്മാ□അമ്പലവാസിക□, നായന്മാ□ഇവരുടഗൈ്യഹങ്ങ□മാത്രമഭേണ്ടായിരുന്നുള്ളു”[11]

இன்றும் வியக்கத்தக்க வகையில் திகழும் பத்மநாப சுவாமி நில வறைங்கள் மற்றும் பத்ம நாப சுவாமி கோயிலில் இருந்து பிற கோயில்களுக்கு செல்லும் மார்க்க வழிகள் இவற்றையும் இன்னாவல் தெளிவுற எடுத்து ரைக்கின்றதை காணலாம்.

“പാഭസ്വാമിക്ഷേത്രത്തതി□നിന്നുമിത്രാനന്ദപുരംക്ഷേത്രത്തിലക്കേുള്ളമാ□ഗ്ഗത്തിനുകുറച്ചുതക്കെുമാറിപടിഞ്ഞാറ ോട്ട്ഒരുഇടവഴി......”[12]

*தமிழில்: பாபசாமி கோயிலிலிருந்து மித்ரானந்தபுரம் கோயிலுக்குச் செல்லும் பாதையில் சிறிது தெற்கிலும் மேற்கிலும் ஒரு பாதை உள்ளது.*

*வரலாற்று அடிப்படையில், பத்மநாபபுரம் (திருவிதாங்கூர்) மார்த்தாண்டவர்மாவின் அரசியல் தலைநகரமாக இருந்தது.*

'പത്മനാഭപുരംഎന്നനഗരംമു□കാലങ്ങളി□തിരുവിതാംകോട്സംസ്ഥാനത്തിന്റെതലസ്ഥാനമായിരുന്നല്ലോ....”[13]

*தமிழில்: பத்மநாபபுரம் நகரம் கடந்த காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்தது.*

*நாவலில் இடப் பெயர்கள் மிகுதியாக காணப்படுவதை காணலாம் எடுத்துக் காட்டாக திருநெல்வேலி, கழக்கூட்டம், திருவிதாங்கோடு, பத்மநாபபுரம், கள்ளியங்காடு, சாரோட்டு போன்ற நகர பெயர்களும் குறிப்பிடத்தக்கன. நாவலில் குறிப்பிடப்பட்ட செங்ஙனாசேரி வீடு கிணறு - அறப்புரை, கலவர, கோடக்கையல், என்ற வரிகள், பெரிய குடும்பங்களில் தனித் தனி அறைகள், ஆயுதங்கள் வைக்கும் இடங்கள், அரிசி சேமிக்கும் இடம் மற்றும் உறவினர் கூடும் முறை போன்றவை இருந்ததை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் 18-ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் சமூக அமைப்பு, வீட்டு கட்டமைப்பு மற்றும் வீரகுல மரபுகள் புரிகின்றன. பஞ்சவங் காட்டு நீலி என்பது திராவாங்கூர் மக்கள் நம்பிக்கைகளில் இருந்து வரும் ஒரு பிரபலமான பேய் கதாபாத்திரம். வாய் மொழியாகவும் இலக்கியங்களிலும் நீலி கதாபாத்திரத்திற்கு வெவ்வேறான கதைகள் கூறப்பட்டாலும் மார்த்தாண்டவர்மா நாவலில் கதைக்களம் மிகவும் விசித்திரமான மற்றும் பயமுறுத்தும் கதாபாத்திரமாக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.*

“പണ്ട്നാഗ□കോവിലിനടുത്ത്ഒരു സ്ത്രീപാ□ത്തിരുന്നു....”[14]

*தமிழில்: ஒருகாலத்தில், நாகர்கோவிலுக்கு அருகில் ஒரு பெண் வசித்து வந்தாள்.*

*இவ்வாறு நாவலில் கார்த்தியாயனியம்மா பாருவிற்கு கதை கூறுவதாக அமைகிறது. நீலி கதாபாத்திரம் பாரம்பரியமான நம்பிக்கைகள் மற்றும் சமூக ஒழுங்குகளுடன் தொடர்புடையவளாக வர்ணிக்கப்படுகிறது. சமூகச் சீரழிவுகளை எதிர் கொள்ளும் ஒரு கதை வடிவாகவும், கலாச்சார குறியீடாகவும் நீலி கதாபாத்திரம் சித்தரிக்கப்படுகிறது. அவரது தோற்றம் மற்றும் செயல்கள் நாவலின் மர்மம், பதற்றம், மற்றும் ஊர் பகை கதையின் அழகை மேலும் வலுப்படுத்துகின்றன.*

## இலக்கிய மதிப்பு

*மார்த்தாண்டவர்மா நாவலில், சி.வி. ராமன்பிள்ளை ஒவ்வொரு அதிகாரத்தையும் ஒரு வசனம் அல்லது முனைப்பு* (epigraph) *கொண்டு தொடங்குகிறார்.*

”വീണിതല്ലോകിടക്കുന്നുധരണി
യി□ശോണിതവുമണിഞ്ഞയ്യോ
ശിവശിവ! നല്ലമരതകക്കല്ലിനോ
ടൊത്തൊരുകല്യാണരൂപ□കുമാര□
മനോഹര□..”[15]

*இந்த வசனம் நாவலின் முதல் அத்தியாயத்தின் தொடக்கமாகும்.*

*ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் முன்னோட்ட வசனம் கதையின் மையக் கருத்தையும், எதிர்பாராத திருப்பங்களையும் வாசகருக்கு முன்னதாக வழங்குகிறது. இதுகதையின் சுருக்கமான முன்னோட்டத்தை உருவாக்கி, வாசகர்களை தொடரச் செய்கிறது. எழுத்தச்சன் போன்றவரின் மஹா பாரதகிலிப்பட்டு போன்ற கலாச்சார வரலாற்றின் வசனங்களை இணைத்து,*

நாவலை கேரளாவின் செழிப்பான இலக்கிய மரபுடன் தொடர்புபடுத்துகின்றது. இந்த வசனங்கள் பல நேரங்களில் கதா பாத்திரங்களின் பயணங்கள் மற்றும் நாவலின் மொத்த கதைப் பரப்புடன் பொருந்தும் சின்னப் பொருள்களை வெளிப்படுத்துகின்றன. இந்த முறையால் வாசிப்பு அனுபவம் வளமாகி, நாவல் கேரளாவின் இலக்கிய மற்றும் கலாச்சார மரபுகளுடன் நெருக்கமாக இணைந்து உள்ளதாக வலியுறுத்தப்படுகிறது.

நாவலின் தொடக்கத்திலேயே, வேடமிட்டு பிராமணராக ஒளிந்து வாழும் இளவரசன், தனதுவீரப் பெருமையை வெளிப்படுத்துகிறார்: ஆடம் பரமில்லாத அந்தப் பிராமணன், சிங்கத்தைப் போல் தோற்றமளித்தான்; இரும்புக்கம்பங்களைப் போன்ற கரங்கள், அகன்ற மார்புதி இது மர்த்தாண்ட வர்மாவின் உண்மையான போர் வீர உருவத்தையும், வரலாற்றில் புகழ்பெற்ற அவருடைய தைரியத்தையும் பிரதிபலிக்கிறது. நாவல் கற்பனைக் கூறுகளுடன் வரலாற்றை இணைக்கிறது. உண்மையான வரலாற்று நபர்கள் ராஜாராம வர்மா, மர்த்தாண்டவர்மா, தம்பி சகோதரர்கள் கற்பனைப் பாத் திரங்களுடன் அனந்த பத்மநாபன், பருக்கட்டி கலக்கப் பட்டுள்ளனர்.

## முடிவு

மர்த்தாண்டவர்மா நாவல் வரலாற்றுச் சம்பவங்களையும் கற்பனையையும் கலந்துரையாடும் அற்புதநூல். மன்னர் ராமவர்மாவின் இறப்பு, எட்டு வீட்டில் பிள்ளமாரின்சதி, தம்பிகளின் உரிமைத் தகராறு, மர்த்தாண்டவர்மாவின் சிம்மாசன ஏற்றம், இவை அனைத்தும் வரலாற்றில் பதிவாகியவை. இதோடு, வீரக்காதலும், மக்கள் புராணங்களும், சமூகக் கருத்துகளும் இணைந்து, நாவலுக்கு இலக்கியச் சிறப்பை அளிக்கின்றன. இவ்வாறு, சி.வி. ராமன் பிள்ளை, வரலாற்றையும் இலக்கியத்தையும் இணைத்து, 18-ஆம் நூற்றாண்டு திருவிதாங்கூரின் அரசியல் - சமூகப் பின்னணியை நமக்குச் சிறப்பாகக் காட்டியுள்ளார்.

## அடிகுறிப்புகள்

1. K.M George.A Survey of Malayalam Literature, Asia Publishing House,1968
2. சி.வி.யின் வரலாற்றுக் கதைகளுக்குஒரு அறிமுகம் (டாக்டர் கே. ராகவன் பிள்ளை) மார்த்தாண்ட வர்மா ப.ண்-24)
3. சி.வி.யின் வரலாற்றுக் கதைகளுக்கு ஒரு அறிமுகம் (டாக்டர் கே. ராகவன் பிள்ளை) மார்த்தாண்ட வர்மா (ப.ண்-24)
4. மார்த்தாண்ட வர்மா நாவல்
5. மார்த்தாண்ட வர்மா நாவல்
6. மார்த்தாண்ட வர்மா நாவல்
7. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-240)
8. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-231)
9. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-142)
10. மார்த்தாண்ட வர்மா நாவல் (பாடம்-3)
11. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-148)
12. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-149)
13. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-143)
14. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-139)
15. மார்த்தாண்ட வர்மா நாவல் (ப.ண்-156)
16. மார்த்தாண்ட வர்மா நாவல் (பாடம் 2)

## முதன்மை நூல்

1. மார்த்தாண்ட வர்மா, சி.விராமண் பிள்ளை, (18-பதிப்பு) டி.சிபுக்ஸ்